முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.39/2021**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 11.06.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 11.06.2024 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | முருகன் | வயது.. | 55 |
| தந்தை பெயர்.. | கலியபெருமாள் | கிராமம்.. | பூதவராயன்பேட்டை |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. என்ன பாரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்கான வரைப்படத்தை மாற்றி அமைந்தனால் என்னுடைய அளவு குறைகிறது. வழக்கு சொத்தில் புல எண். என்னவென்றால் புல எண.230. வழக்கு சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் என் தகப்பனார் கிரயம் வாங்கிய சொத்து. என் தகப்பனார் யாரிடம் இருந்து எந்த வருடம் கிரயம் வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனார் கலியபெருமாளுக்கு வாதிகளை தவிர்த்து வேறு வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் வேறு யாரும் இல்லை. என் தகப்பனார் கிரயப்படி எனக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் 12 செண்ட் அதில் 3 செண்ட் என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே கிரயம் கொடுத்துவிட்டார் ஆகையால் 9 செண்ட் நிலம் எனக்கு பாத்தியமானது ஆனால் 9 செண்ட் நிலம் என்னிடம் தற்போது இல்லை.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் தாயார் அஞ்சலை எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 4 செண்ட் நிலம் மேற்சொன்ன 9 செண்ட் நிலத்திற்கு உள்ளடங்கும். 2008-ல் அஞ்சலை அம்மாள் அருள் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அருள்-யை ஏன் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் அவருக்கான 4 செண்ட்-யை இன்னும் பிரித்து தரவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தின் சொத்து விவரத்தில் தென்வடல், கீல்மேல் பரப்பளவு குறிப்பிடபடவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண்.108/6 குறிப்பிட்டுள்ள நிலையில் தற்போது வரை அது அவ்வாறு தான் வருவாய் ஆவணங்களில் பதிவாகியுள்ளது என்றால் தற்போது அது எண்.2 ஆக உள்ளது. புல எண்.108/6 UDR-ன் படி புல எண்.238 ஆக மாறி உள்ளது என்றால் சரிதான். புல எண்.238 எத்தனை உட்பிரிவாக மாறி உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் என்னுடைய நிலம் எங்கு அமைந்துள்ளது என்றால் உட்பிரிவு இரண்டில் அமைந்துள்ளது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் உட்பிரிவு 2- க்கு சொத்தின் கீழ்புரத்தில் தென்வடலாக 26.2 ஆக உள்ளது என்றால் அது பற்றி எந்த விவரமும் எனக்கு தெரியாது. புல எண்.238 -ல் 10 பாகமாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் முழு புல எண்ணையும் அளந்தால் தான் உட்பிரிவு 2 ல் அளவுகள் பற்றிய குறிப்பு சரியாக இருக்கும் என்றால் சரிதான்.

4. என் சொத்தில் அளவு குறைபாடு உள்ளது பற்றி ஏதேனும் மனுக்கொடுத்துள்ளேனா என்றால் இல்லை இந்த வழக்கு மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக வருவாய்த்துறை ஆவணங்களில் குறைபாடுகளில் இருந்தால் வருவாய்த்துறைக்கு தான் மனு கொடுக்கப்படும் என்றால் சரிதான். சிதம்பரம் சார் ஆட்சியரால் கடந்த 2019 ம் ஆண்டு புல எண்.238 உட்பிரிவுகளை திருத்தம் செய்வது சம்மதமாக திருஞானசம்மந்தம், 1ம் வாதி, சதாசிவம், வீரமணி, வீரபெருமாள் ஆகியோருக்கு கிராம நிர்வாக அலுவலர், பூதராயன்பேட்டை அவர்களுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, நான் எந்த சம்மனையும் வாங்கவில்லை. திருத்தம் செய்வதற்கான அறிவிப்பு பிரதிவாதிகளால் கொடுக்கப்பட்டு அதில் விசாரணைக்கு நான் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. விசாரணைக்கு ஆஜராகத நிலையில் சார் ஆட்சியர் அறிக்கையின் படி புல எண்.238/2,3,4 20.05.2020 ல் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது.

5. என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் பத்தி 10 ல் குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றிய முழு விவரம் தெரியாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தின் அளவுகளில் குறைபாடு இருந்தால் பக்கத்து நிலத்துக்காரர்களை தரப்பினரர்களாக சேர்க்கப்பட்டு முழு விசாரணை நடைபெற்று அதன் அடிப்படையில் தான் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றால் சரியல்ல. அவ்வாறான விசாரணை தான் 2019 ல் நடைபெற்றது என்றாலும், அதில் நாங்கள் யாரும் ஆஜராக நிலையில் திருத்தம் ஏதும் மேற்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய வழக்கை நான் நிரூபிக்கும்பட்சத்தில் பிரதிவாதிகள் அதனை நடைமுறைபடுத்த தயாராக இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

6. என்னுடைய நிலத்திற்கும் பக்கத்து நிலத்துக்காரர்களுக்கும் அளவுகள் மாறியுள்ளது என்றால் சரிதான். வழக்கில் போதிய தரப்பினர்களை சேர்க்கப்படாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை :**

**-இல்லை-**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Principal District Munsif (FAC)
Chidambaram.